DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 255/2024 |
| Prosecution: | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | சுப்பையா |
| **Father Name** | ~ | முனியாண்டி |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 04.02.2026.**

**முதல் விசாரணை**

நான் குரோம்பேட்டையில் பாடசாலை தெருவில் குடியிருந்து பில்டிங் கான்டிராக்டர் வேலை செய்து வருகிறேன். பக்கத்து தெருவில் எனக்கு சொந்தமாக உள்ள வீட்டில் மேற்கு வங்கத்தை சேர்ந்த சாட்சி திதாஷா என்பவர் குடியிருந்து வந்தார். சாட்சி திதாஷா பாலாஜி மருத்துவ கல்லூரியில் மருத்துவம் படித்து வந்தார். கடந்த 05.12.2023 ஆம் தேதி மாலை சுமார் 3.30 மணிக்கு சாட்சி கல்லூரியை முடித்துவிட்டு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது அவரது கைப்பையை பறித்து சென்று விட்டார்கள். அது தொடர்பாக மேற்படி சாட்சி எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். நான் சம்பவ இடம் சென்று மேற்படி சாட்சியை அழைத்து கொண்டு காவல் நிலையம் சென்று

மேற்படி சாட்சிக்கு தமிழ் மொழி தெரியாததால் நான் புகார் கொடுத்தேன். அந்த புகாரின் சங்கதிகளை சாட்சிக்கு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து சொன்னேன். அந்த கைப்பையில் பணம் ரூ. 4000/- மற்றும் கல்லூரி அடையாள அட்டை, பான்கார்டு ஆகியவை இருந்ததாக சொன்னார். அதன் பின்னிட்டு 10 நாட்கள் கழித்து கைப்பையை பறித்து சென்ற நபர்களை கைது செய்து காவல் நிலையத்தில் இருப்பதாக தகவல் கிடைக்கப்பெற்று காவல் நிலையம் சென்று பார்த்தபோது ஆஜரிலுள்ள எதிரிகள்தான் கைப்பையை பறித்து சென்றதாக போலீசார் அடையாளம் காண்பித்தார்கள். தற்போது மேற்படி எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி காணாமல் போன பணம் ரூ. 4,000/-த்தில் ரூ. 1,000/- மட்டும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டு மேற்படி சாட்சி நீதிமன்றத்தில் இருந்து மனு தாக்கல்செய்து இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுள்ளார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

இவ்வழக்கு சம்பவம் நடைபெற்ற தினம் அன்றே புகார் கொடுத்தீரா என்றால் ஆமாம். வழக்கு சம்பவம் எப்போது நடைபெற்று எப்போது புகார் கொடுத்தீர்கள் என்றால் 3 முதல் 3.15 மணியளவில் சம்பவம் நடைபெற்றது. புகார் 3.45 மணி முதல் 4 மணியளவில் கொடுத்தேன். வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட நபர் சொல்லிதான் வழக்குபற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். புகாரில் கைப்பையின் கம்பெனி மற்றும் கலர் ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளீரா என்றால் இல்லை. கைப்பையை பறித்து சென்ற நபரின் அடையாளத்தை புகாரில் குறிப்பிட்டுள்ளீரா என்றால் இல்லை.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

**S/d C.P. Mullai Vanan**

District Munsif-cum

Judicial Magistrate

**Pallavaram.**